**சுருக்கம்**

தொழிலாளர் – தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர்கள் நல வாரியம் – தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர்கள் நல வாரிய தலைமை அலுவலகம் மற்றும் சார்நிலை அலுவலகங்களில் Video Conferencing System மற்றும் 35 மடிக்கணினிகள் கொள்முதல் செய்ய அனுமதித்து – ஆணைகள் வெளியிடப்படுகின்றன

---

**தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டு(ஐ2)த் துறை**

அரசாணை (நிலை) எண்.147 நாள்: 13.10.2021

பிலவ வருடம், புரட்டாசி–27
திருவள்ளுவர் ஆண்டு –2052

படிக்கப்பட்டது:

1. தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர்கள் நல வாரிய செயலாளர் அவர்களின் கடித எண். F1/14274/2020, நாள்.10.11.2020.
2. தொழிலாளர் ஆணையரின் கடிதம் எண்.W2/29264/2020, நாள்: 24.11.2020.

------

**ஆணை:**

மேலே இரண்டாவதாக படிக்கப்பட்ட கடிதத்தில், தொழிலாளர் ஆணையர் அவர்கள் 27.10.2020 அன்று நடைபெற்ற தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர்கள் நல வாரிய 33–வது கூட்டத்தில் தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர்கள் நல வாரிய தலைமை அலுவலகம் மற்றும் மாவட்ட தொழிலாளர் உதவி ஆணையர் (ச.பா.தி) அலுவலகங்களில் Video Conferencing System அமைத்தல் மற்றும் மடிக்கணினிகள் வழங்குதல் தொடர்பாக பிரேரணை சமர்ப்பிக்கப்பட்டது என்றும் அதற்கு அரசு அனுமதிக்கும் செலவினங்களை வாரிய நிதியிலிருந்து மேற்கொள்ள தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது என தெரிவித்துள்ளார்.

(த.பி.பா.)

2. மேலும், தொழிலாளர் ஆணையர், கோவிட்–19 தொற்று காரணமாக மாவட்ட தொழிலாளர் உதவி ஆணையர் (ச.பா.தி.) அலுவலர்களுடனான பணித்திறனாய்வுக் கூட்டங்கள் Video Conferencing முறையிலேயே நடைபெற்று வருகிறது எனவும், மேலும், தற்போது இணையதளம் மூலம் பதிவு, புதுப்பித்தல், கேட்புமனுக்கள் சமர்ப்பித்தல் தொடர்பான மென்பொருள் மற்றும் இணையதள உருவாக்கம் குறித்த கலந்தாய்வு கூட்டங்கள் தொடர்ச்சியாக நடைபெற்று வருகின்றன எனவும், பணித்திறனாய்வுக் கூட்டங்கள், ஒருங்கிணைந்த மென்பொருள் தொடர்பான கூட்டங்கள் Webex, Google Meet போன்ற இணையதள செயலிகள் மூலம் நடைபெற்று வருகிறது எனவும், மேற்படி கலந்தாய்வுகளில் Video / Audio சரிவர இயங்காத நிலையில் திறனாய்வை குறிப்பிட்ட நேரத்தில் முடிக்க இயலவில்லை எனவும், மேலும், ஒலிப்பெருக்கியுடன் இணைக்க இயலாததால் கலந்தாய்வுகள் சீரான முறையில் நடைபெறவில்லை எனவும், தற்போது கோவிட்–19 தொற்று பரவலை தடுக்கும் விதமாகவும் Video Conferencing வசதி ஏற்படுத்துதல் அவசியமாகும் எனவும், மேலும், வாரிய செயல்பாடுகள் தொய்வின்றி நடைபெற இன்றைய தினத்தில் Video Conferencing வசதி ஏற்படுத்துதல் இன்றியமையாததாகும் எனவும் இதற்கான உத்தேச செலவினம் பின்வருமாறு எனத் தெரிவித்துள்ளார் :–

| Sl. No. | Description | Qty | Unit Rate | GST extra | Total (Rs.) |
|---|---|---|---|---|---|
| 1. | Logitech MEETUP | 1 No | 1,35,285 | 18% | 1,59,636 |
| 2. | MEETUP Mic 10M Extended Cable | 1 No | 15,500 | 18% | 18,290 |
| 3. | Expansion Mic for MEETUP | 1 No | 31,750 | 18% | 37,465 |
| 4. | Samsung 55" LED TV | 1 No | 75,000 | 28% | 96,000 |
| Total | | | | | 3,11,391 |

3. மேலும், அவர் மாவட்ட அலுவலகங்களில் தொழிலாளர் உதவி ஆணையர்களுக்கு (ச.பா.தி) மடிக்கணினிகள் கூடுதலாக வழங்கும் நேர்வில் கீழ்க்கண்டவாறு உத்தேச செலவினம் ஏற்படும் என தெரிவித்துள்ளார்.

| Sl. No. | Description | Qty | Gem Price (in Rs.) |
|---|---|---|---|
| 1. | Acer intel core i5, 14 Inch Window 10 Professional–Labtop (8GP RAM) (Model : Acer One 14Z2-485) | 1 No | 64,999 |

மேற்படி Video Conferencing வசதி மற்றும் மடிக்கணினி 35 மாவட்ட அலுவலகங்கள் மற்றும் தலைமை அலுவலகத்திற்கு கொள்முதல் செய்ய ஆகும் மொத்த செலவினம் கீழ்கண்டவாறு என தெரிவித்துள்ளார் :-

| | | |
|---|---|---|
| தொலைக்காட்சி பெட்டியுடன் இணைந்த Video Conferencing System (தலைமை அலுவலகம் மற்றும் 35 மாவட்ட அலுவலகங்கள்) | 36 x 3,11,000/- | ரூ.1,11,96,000 |
| மடிக்கணினிகள் (35 மாவட்ட அலுவலகங்கள்) | 35 x 65,000/- | ரூ. 22,75,000 |
| **மொத்தம்** | | **ரூ.1,34,71,000** |

(ரூபாய் ஒரு கோடியே முப்பத்து நான்கு இலட்சத்து எழுபத்து ஒன்றாயிரம் மட்டும்)

4. மேற்காணும் Video Conferencing System மற்றும் மடிக்கணினிகள் மொத்தமாக தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர்கள் நல வாரிய தலைமை அலுவலகம் மூலம் கொள்முதல் செய்யும் நேர்வில் காலதாமதம் ஏற்படும் எனவும், எனவே, ஒருமித்த Specification அடிப்படையில் அந்தந்த மாவட்ட தொழிலாளர் உதவி ஆணையர் (ச.பா.தி.) அலுவலகங்கள் மூலம் decentralaised ஆக கொள்முதல் செய்ய அனுமதி அளிக்கும் நேர்வில் அலுவலகமொன்றிற்கு (3,11,000+65,000) ரூ.3,76,000/- மட்டுமே செலவினம் ஏற்படும் எனவும், மேலும், காலதாமதமின்றி Video Conferencing System அமைக்க வழிவகை ஏற்படும் என தெரிவித்துள்ளார். எனவே, தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர்கள் நல வாரிய தலைமை அலுவலகம் மற்றும் மாவட்ட தொழிலாளர் உதவி ஆணையர் (ச.பா.தி.) அலுவலகங்களில் தொலைக்காட்சி பெட்டியுடன் இணைந்த 36 Video Conferencing System அமைக்கவும், கூடுதலாக தொழிலாளர் உதவி ஆணையர்களுக்கு (ச.பா.தி.) 35 மடிக்கணினிகள் கொள்முதல் செய்யவும், இதனை சம்மந்தப்பட்ட அலுவலகங்களே ஒருமித்த Specification அடிப்படையில் தனித்தனியே கொள்முதல் செய்து கொள்ளவும், இந்த செலவினத்தை தமிழ்நாடு கட்டுமான தொழிலாளர்கள் நல வாரிய நிதியிலிருந்து மேற்கொள்ள அனுமதி ஆணை வழங்குமாறு கேட்டுக்கொண்டுள்ளார்.

5. தொழிலாளர் ஆணையர் அவர்களின் கருத்துருவை அரசு கவனமான பரிசீலனைக்குப்பின் ஏற்று, தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர்கள் நல வாரிய தலைமை அலுவலகம் மற்றும் மாவட்ட தொழிலாளர் உதவி ஆணையர் (ச.பா.தி.) அலுவலகங்களில் தொலைக்காட்சி பெட்டியுடன் இணைந்த 36 Video Conferencing System அமைக்கவும், கூடுதலாக தொழிலாளர் உதவி ஆணையர்களுக்கு (ச.பா.தி.) 35 மடிக்கணினிகள் கொள்முதல் செய்ய மேலே பத்தி 3-ல் குறிப்பிட்டுள்ளபடி மொத்தமாக ரூ.1,34,71,000/- செலவில் சம்மந்தப்பட்ட அலுவலகங்களே ஒருமித்த Specification அடிப்படையில் தனித்தனியே கொள்முதல் செய்து கொள்ளவும்,

இந்த செலவினத்தை தமிழ்நாடு கட்டுமான தொழிலாளர்கள் நல வாரிய நிதியிலிருந்து மேற்கொள்ளவும், கொள்முதல் செய்யப்படும் பொருட்கள் GEM portal மூலம் கொள்முதல் செய்யப்பட வேண்டும் என்ற நிபந்தனையுடன் அனுமதி வழங்கி ஆணையிடுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

இரா. கிர்லோஷ் குமார்
அரசு செயலாளர்

பெறுநர்:
முதன்மைச் செயலாளர்/தொழிலாளர் ஆணையர், சென்னை-600 006.
செயலாளர், தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர்கள் நல வாரியம், சென்னை-600 034.
மாநில கணக்காயர், சென்னை-600 018.
சம்பளம் மற்றும் கணக்கு அலுவலர், சென்னை-600 035.

<u>நகல்:</u>
நிதித் துறை, சென்னை-600 009.
அரசு செயலாளரின் முதுநிலை தனிச் செயலாளர், தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை, சென்னை-600 009.
மாண்புமிகு தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டு அமைச்சரின் முதுநிலை நேர்முக உதவியாளர், சென்னை-600 009.
தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டு(அநமு-2)த் துறை, சென்னை-600009.
இருப்புக் கோப்பு / உதிரி நகல். (கோப்பு ண்.19498/ஐ2/2020)

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

13/10/2021
பிரிவு அலுவலர்
13/10/21